**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 11/2021**

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய சத்தியவான்ராஜ் **PW.1** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 23.01.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **சத்தியவான்ராஜ்** | | |
| Father Name | : | **சந்திரசேகரன்** | Court | : |
| Village | : | **மேமாத்தூர்.** | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 44 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 2ம் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

27.06.2015 தேதியில் 1ம் வாதி, 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.12.2017 தேதியிட்ட 1ம் வாதியின் கணவரும், 2ம் வாதியின் தந்தையுமான சந்திரசேகரன் 6ம் பிரதிவாதிக்கு கொடுத்த பதிலறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.10.1995 தேதியில் 6ம் பிரதிவாதி சுப்பம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரய உடன்படிக்கையில் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.08.2015, 27.03.2007 ஆகிய தேதிகளில் வாதிகள் பெயரில் உள்ள வாய்தா ரசீதுகள் (எண்ணிக்கை –2) அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.04.2018 தேதியிட்ட மேமாத்தூர்

கூட்டுறவு சங்க கடன் ரசீதின் அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. PMFBY பயிர் காப்பீட்டு திட்ட ரசீதுகள் (எண்ணிக்கை – 3) அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.01.2021 தேதியிட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பாண்டிச்சேரியிலிருந்து 2ம் வாதிக்கு வந்த கணக்கு விபரம் நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.